உ

சிவமயம்.

அகஸ்தியமஹாமுனிவர்

அருளிச்செய்த

# வைத்திய

# தைல முறைகள்-ா.



த. துரைசாமி முதலியாரவர்களால்

சென்னை,

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட்] 1927. [காபிரைட்

சென்னை, பாளையப்பன் தெருவு, நெ. 23,

உ

சிவமயம்.

அகஸ்தியமஹாமுனிவர்

அருளிச்செய்த

# வைத்திய

# தைலமுறைகள் - ௱.

இது

முன்பரிசோதித்த

பிரதிக்கிணங்கத்

திருவெண்காடு

**ஆறுமுகசுவாமிகளால்**

பார்வையிடப்பட்டு,

டி. சாரதாபுத்தகசாலை,

**த. துரைசாமி முதலியாரவர்களால்**

சென்னை.

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1927.

நெ. 23, பாலையப்பன் தெரு, மிண்ட் போஸ்ட், மதராஸ்.

Digitized By Roja Muthiah Research Library

## து. துரைசாமி முதலியார்,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட் பில்டிங் போஸ்டு, சென்னை.

---

# கூந்தல் வளரும் தைலம்



அநேக திவ்விய மூலிகைகளால் செய்து எண்ணையில் கலந்துள்ள சிறந்த வஸ்து பிரதிதினமும் காலையில் மயிர்களுக்குப் பூசிவந்தால் கூந்தலானது 8-தினத்தில் ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும் கண் எரிச்சல் நீங்கும், பேன்கள் சேராது, சுண்டுகள் உண்டாகாது, மயிர்கள் உதிராது, வழுக்கையான இடங்களிலும், மயிர் முளைக்கும், உண்மையாய் கூந்தலை வளர்க்கப் பிரிய முள்ளவர்கள் ஒரு புட்டி வாங்கி உபயோகித்தால் அப்போது உண்மை தெரியும்.

ஒரு புட்டியின் விலை ரூபா 1 0 0

## ரோமசங்காரிபவுடர்.



எந்த சமயத்தில் ரோமங்களை அகற்ற வேண்டுமென்று நினைக்கின்றீரோ அப்பொழுதே 'சிறைப்போன்' சிரைக்கும் கத்தி இவை இரண்டினுடைய உதவியுமில்லாமல் உடனே ரோமங்களை நீக்கிவிடும் ரோமங்கள் இருக்கவேண்டாமென்று நாம் விரும்புகின்ற இடத்தில் இந்தப்பவுடரைக்கொஞ்சமெடுத்துதண்ணீர்விட்டு குழைத்து கொஞ்சம் கனமாகத்தடவி 2 நிமிஷம் பொறுத்து ஓலையினாலாவது கார்டினாலாவது வழிக்க ரோமங்கள்யாவும்நீங்கிவிடும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 0 8 0

## பொன்னாங்கண்ணித் ஸ்நானத்தைலம்.



இத்தைலத்தைக்கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கண் கைகால் எரிச்சல் தேகக்கொதிப்பு மேககாங்கை மூளையின் வரட்சி உள்ளங்கை உள்ளங்கால் எரிவந்தம் கண்புகைச்சல் கண்ணை மூடித்திறந்தால் அனலாய் இருத்தல் பீனிசம்நாசியில் நீர்வடிதல் இரத்தம் வடிதல், கண்ணோய், கண்சிகப்பு, பீளைசார்தல், கண் இமை அரிப்பு, காதிரைச்சல் தலைநோய், கிறுகிறுப்பு இன்னும்கண்டத்திற்கு மேற்பட்ட எல்லாவியாதிகளையும்கண்டித்து மூளையைப் பலப்படுத்தும் கண்கள் குளிர்ந்து பிரகாசிக்கும் மூளையின் அனலை ஆச்சரியப்படும்படி குணஞ்செய்து உஷ்ணத்தினால் சரீரம் எப்போதும் கதகதவென்றிருப்பதைமாற்றி தேகத்தைக் குளிரப்பண்ணும் மூத்திரச்சூடு மூத்திர எரிச்சல் முதலியவைகளை மாற்றும் இதன் விலை மிகவும் சொற்பம்.

இதன் விலை 4 அவுன்ஸ் டப்பி 1-க்கு ரூபா 1 0 0

## முகப்பருக்களுக்கு மருந்து.

அழகிய முகங்களைக்கெடுத்து விகார ரூபத்தைக்கொடுக்கும் பருக்கள் தழும்புக்கள் அதிக வெயிலில் திரிவதால் உண்டாகும் கறுப்பு நிறம் முதலியவைகளைப் போக்கி முகத்திற்கு நல்ல அழகையும்காந்தியையும் கொடுக்கும்.

புட்டி 1-க்கு அணா 0 8 0

Digitized By Roja Muthiah Research Library

உ

கடவுள் துணை.

---

அகஸ்தியமஹாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய

# தைலமுறைகள் நூறு.

பாயிரம்-காப்பு.

மாமேவுகௌரிமனோன்மணியாள்செய்ய
மலர்பாதந்தனைத்துதித்துவையமீது
தேமேவுவயித்தியத்தின்றயிலப்பாங்கைச்
செந்தமிழாற்சொல்வதற்குச்சீர்மிகுந்த
காமேவுமூஷிகமீதேறியன்பர்
கடியிலுறுங்கயமுகவர்கமலமென்னும்
பாமேவுமுபயதிருப்பதந்துதித்துப்
பாங்குடனேகாப்பாகப்பன்னினேனே 1

பன்னியமாவயித்தியத்தின்றயிலப்பாங்கைப்
பண்டிதர்களனுஷ்டத்துமூலிகைதான்
நன்னயமாய்த்தேடியுடன் செய்தேயிந்த
நானிலத்திலுள்ளோர்கள்வியாதிதீர
உன்னியகாலையிற்றருகத்தாயின்பாதம்
உளங்கருதிநாதாக்களடியைப்போற்றிச்
சொன்னயங்களமைந்தகணபதியின்பாதந்
துதிப்பவர்க்குப்பலநோயுந்தொலையுஞ்சீரே 2

Digitized By Roja Muthiah Research Library

சீர்மிகுந்தசிவபிரானடியைப்போற்றி
செப்பமயிலேறிவருங்குகன்றாட்போற்றி
தார்மிகுந்ததிருமாலினிதாள்போற்றி
சத்திசிவகாமியிலட்சுமிதாள்போற்றி
பேர்மிகுந்தகலைமகளின்சரணம்போற்றி
பேசரியபெரியோர்கள்பதமும்போற்றி
ஏர்மிகுந்ததயிலத்தின் வயித்தியக்கூறை
யிப்புவியிற்செந்தமிழாலிசைத்திட்டேனே. 3

பாயிரம்முற்றிற்று.

---

நூல்

மேகத்திற்குத்தயிலம்.

நிகரில்லாமேகத்தின்றயிலங்கேளு
நிலையானசந்தனமுமிலாமிச்சோடு
மகிழ்வானஆவாரையின்பட்டைதானும்
வகைபத்துப்பலமாகவாங்கியேதான்
பிகலாமற்*றுணிநீர்விட்டொன்றாய்ப்
பெருமையுற்றகிஷாயத்தைவாங்கிக்கொண்டு
நகையாமல்நல்லெண்ணெய்நாழிவிட்டு
நன்னாரிவேர்பலந்தானரைத்துப்போடே 1

* துணி-பத்தரை, அல்லதுமுப்பத்திரண்டுபடி.

போட்டதனைக்காய்ச்சிமெழுகுற்றதானா
புகட்டியபவேடிந்திடுவாய்பூசக்கேளு
நாட்டிதனைமுழுகிவரமேகந்தீரும்
நலமானதேகமது () யிருகும்பாரு
பூட்டதனைமேகநீர்போகவேண்டிப்
புனிதமாய்மருந்தொன்றுபுகலக்கேளு
சாட்டதனைமுன்புசொன்னபற்பங்கொண்டு
சார்ந்துநீகொடுத்திடவேசாந்தமாமே. 2

() இறுகல் பலப்படுத்தல்.

Digitized By Roja Muthiah Research Library

## வில்வாதித்தயிலம்.

சாந்தமாம்வில்வாதித்தயிலங்கேளு
தாரணியில்வில்வவேர்பலந்தான்பத்து
பாந்தமாயிடித்ததனைப் 0 பதக்குநீரிற்
பருவமாய்க்காய்ச்சியேயெட்டொன்றாக்கிப்
போந்தஎண்ணெய்நாழிவிட்டுச்சந்தனம்பலந்தான்
புகழானகிஷாயத்திலரைத்துப்போடு
வாய்ந்தமெழுகாகுல்வடித்துக்கொண்டு
வாகாகமுழுகிவரவரிசைகேளே 3

0 பதக்கென்பது இரண்டுபடி.

வரிசையாய்முழுகிவரப்பித்தம்போகும்
மைந்தனேகபாலத்தில்வெட்டைபோகும்
இருமைபெறஆக்கிவைக்குமேகம்போகு
மிருகண்ணுந்தெளிவுண்டாமிருமல்போகும்
உரிசைபெறப்பித்தமெல்லாமோடிப்போகும்
உள்ளயர்ச்சியுட்சுரங்களொழிந்துபோகும்
தரைமீதிற்றளும்பிறக்குஞ்சூட்சஞ்சொன்னேன்
சம்பிரதாயமுமிதுதான்றாணியோர்க்கே 4

## வேங்கைத்தயிலம்.

தரணியுள்ளமானிடர்கள்பிழைக்கவேண்டிச்
சாற்றுகிறேன்வேங்கையிடதயிலந்தன்னைக்
கரணியாம்வேங்கைபலம்பத்துவாங்கிக்
காய்ச்சிவிடுதூணிநீ 0 ரெட்டொன்றாக்கித்
திரணியுள்ளகிஷாயத்தைவடித்துக்கொண்டு
திறமாகஎளுமிச்சம்பலமொன்றாக
அரணியாங்கிஷாயத்திற்குழப்பிமைபோ
லழகானமெழுகுபதமானவாறே 5

0 எட்டொன்றென்றது-எட்டிலொருபாகம்.

Digitized By Roja Muthiah Research Library

## பாகமூழ்கிவர.

ஆன்வைகேள்வாதமொடுசூலைபோகும்
அடர்ந்திட்டபித்தமதுமாண்டுபோகும்
பீனிசங்கள்மண்டையிடிபிறட்டல்சீதம்
பெலமானவீக்கமுதல்வாங்கிப்போகும்
மேனியெல்லாங்காந்தியுண்டாம்விஷரோகம்போம்
வெகுவாகமுன்சொன்னதயிலப்போக்கு
பூனிதமாய்ச்சொல்லிவிட்டேன்றெளிவாய்ப்பாரீர்
புகழானபற்பத்தின்போக்குநூறே 6

## வெட்டிவேர்த்தயிலம்.

போக்கானதயிலமொன்றுசொல்லக்கேளு
புதிதானவெட்டிவேர்பலந்தான்பத்து
நோக்காகவிடித்ததனைப்பதக்குநீரில்
நாணுக்கமாய்க்காய்ச்சியேயெட்டொன்றாக்கி
வாக்காகவடித்ததனிலெண்ணெய்நாழி
வளமையாயதிமதுரமபலந்தானென்று
தாக்காகஎண்ணெக்குளரைத்துக்கொண்டு
சாந்தமாய்மெழுகுபதந்தன்னில்வாங்கே 7

வாங்கியேமுழுகிவரவரிசைகேளு
மாநிலத்திற்பீனிசங்கள்மண்டைசூலை
யோங்கியேகுட்டமொடுபீநீர்க்கோவை
யொளிமருவுங்கண்புகைச்சல்காதுமந்தம்
வாங்கியேயெய்ப்பிளைப்புகைகாலோய்வு
வறிவுகெட்டதாதுசமுமிருமல்காந்தி
நீங்கியேபோவதற்குமண்டலந்தான்
நேராகவொன்றைவிட்டுவொருநாளென்னே 8

## வேம்பின்தயிலம்.

என்னவின்னமொருதயிலஞ்சொல்வேன்கேளா
யெளிதாகவேம்பினிடபட்டைவாங்கி

Digitized By Roja Muthiah Research Library

உன்னவேகால்துலாமிடித்துக்கொண்டே
வொருதூணிநீர்விட்டொன்றாய்க்காய்ந்தாற்
சொன்னபடியெட்டொன்றாய்வடித்துவாங்கிச்
சுருதிபோலெண்ணெயிருநாழிவிட்டு
நன்னயமாயேலக்காய்பலமிரண்டு
நலமானகிஷாயத்திலரைத்துப்போடே 9

அரைத்துடனேகாய்ச்சியதுமெழுகதானல்
ஆற்றியேவடித்துவைத்துமுழுகும்போது
நிரைத்திட்டவாதமெல்லாமெங்கேபோச்சு
நிசமானசூலையொடுகுட்டரோகம்
திரைத்திட்டதழுதனையுமேற்கொடுப்புச்
செங்கரப்பன்புண்புரைகள்சேராதோடு
முரைத்திட்டதயிலத்தினுறுதிமெத்த
வுத்தமனேதயிலமொன்றுவுரைக்கின்றேனே 10

குறுந்தொட்டிவேர்த்தயிலம.

உரைக்கிறேன் () குறுந்தொட்டிவேர்பலங்கே
ளுத்தமனேயொருதுலாம்நிறுத்துப்போடு
நிரைக்கிறேன் தூணிநீரெட்டொன்றாக்கி
நேரானஎண்ணெயிருநாழிவிட்டுக்
கரைக்கிறேன்கிஷாயத்திலரைத்துமைபோற்
கரகசாஇருபலந்தான்கண்டுகொள்ளு
நரைக்கிறேனெனக்கென்னவாதமெல்லாம்
நடுநடுங்கியோடுமடாநயந்துபாரே 11

() குறுந்தொட்டிவேர்-சிறுகாஞ்சொறி

கொடுவேலித்தயிலம்.

நயமானகொடுவேலிபலந்தான்பத்து
நன்றாகவிடித்ததனைப்பதக்குநீரில்
வயமாகக்காய்ந்துலர்த்தியெட்டொன்றானல்
வண்மையுடனல்லெண்ணெய்நாழிவிட்டு

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST-INDIA

Digitized By Roja Muthiah Research Library

0 நியமானபுன்னைக்காய்விகித ? மாவெண்
ணெய்யுடனேசீரகமோர்பலந்தானிட்டு
சியமாகஅரைத்ததனைப்பாகிற்சேர்த்து
சீரானமெழுகுபதமானவாறே 12

0 கொடுவேலி-சித்திரைமூலம் வேர்.

? ஆவெண்ணெய்-பசுவெண்ணெய்.

ஆனதயிலம்வடித்தேமுழுகும்போது
ஆனந்தவாய்வினுடனந்தரமாம்வாய்வு
தேனம்ருங்குழலாள்கேள்வாதமெல்லாஞ்
சிறுசொரியுஞ்சிரங்குகுஷ்டம்தினவும்போகும்
போனதொருஅரையாப்புக்கிரந்திசூலை
புண்புரைகள்பிளவுமுதற்பொடிப்புவீக்கம்
நானென்னவந்தநோயனைத்தும்தீரும்
நல்லதொருதயிலமதுநாடிப்பாரே 13

சீரகத்தயிலம்.

பாரப்பாசீரகமும்பலமிரண்டு
பதமாகவிடித்துநீர்பதக்கிற்போட்டு
சிரப்பாஎட்டொன்றாய்க்கியாழம்வாங்கித்
தெளிவானநல்லெண்ணெய்படிதான்சேரு
காரப்பா 0 கார்போகிபலந்தானொன்று
கஷாயத்திலரைத்ததனைக்கலக்கிக்கொண்டு
ஏரப்பாமெழுகுபதமாகவாங்கி
யியல்பாகமுழுகிவரக்குணத்தைக்கேளு 14

0 கார்போகி-கார்போகி அரிசி.

குணமென்னசுரமெட்டுவாய்வுபத்து
குட்டமொடு 0 தமுதனையுங்குண்டலமுங்கேளு
பணமென்னவாந்திபித்தங்கிறுகிறுப்பு
வாயின்ருவந்ததொருசோகைபாண்டு

Digitized By Roja Muthiah Research Library

கணமென்னகண் குளிர்ச்சிஉஷ்ணரோகம்
கபாலத்திற்சூடானகப நீர்க்கட்டு
பணமென்னநோய்தீரமருந்துமுண்டோ
பாருலகின்முளைத்தமூலிகையிற்பாரே 15

() தமுதனை-மேகத்தடிப்பு,

மூலிகையில்வெகுமூலிசஞ்சீவியாக
முளைத்ததேசமலைதோறுங்காடுதோறும்
சாலிகைக்குவெகுமூலி நாட்டுக்குள்ளே
சாதகத்தையறியார்கள் சண்டிமாண்பர்
ஆலிகைக்குள்வயித்தியன் முன்குணத்தைக்காணான்
ஆண்மையினால்வயிற்பிழைக்கவலைவான்மட்டை
கோலிகைக்குள்மனதுவைக்கவேண்டாஞ்சொன்னேன்
குறையானவிருநூற்றின்மறையைப்பாரே 16

## சூரித்தயிலம்.

நூற்றிலேயின்னமொருதயிலங்கேளு
நுணுக்கமுள்ள () சூரியது துலாமுங்கால்தான்
* ஊற்றுவேனீர்பதக்கிலிடித்துப்போடு
வொருவிறகாற்காய்ந்துலர்த்தியெட்டொன்றுனால்
ஆற்றியேவடித்துடனேயெண்ணெய் நாழி
யதில்விட்டுக்காக்கவகைசாற்றக்கேளு
சோற்றிலேயருபிரண்டைக்காயும் நாழி
சுக்கதிலேபலமொன்றுமரைத்துச்சூட்டே 17

() சூரி-எருக்கு.

* ஊற்றுவயனீர்-சுரப்புசபலம்.

கூட்டியேமெழுகுபதமாகவாங்கித்
தோணவேமூழ்கிவாமண்டலந்தான்
ஒட்டிவிடுங்கிராந்திகுட்டஞ்சூலைகுன்மம்
உண்டுவிடக்கிராணியெல்லாமுள்மூலத்தை



Digitized By Roja Muthiah Research Library

மாட்டியே நீர்களெல்லாம்வாங்கிப்போகும்
வாங்காதபீனிசமுமண்டசூலே
தாட்டிகமாய்த்துரத்திவிடுந்தயிலப்போக்குஞ்
சஞ்சீவிபோலவுந்தான்சாற்றினேனே 18

கீழ்க்காய்நெல்லித் தயிலம்.

சாற்றவின்னம்வகைகேளுகீழ்க்காய்நெல்லி
சமூலமாய்க்காற்றுலாவிடித்துப்போடு
ஆற்றுநீர் தூணிவிட்டுக்கியாழஞ்செய்து
அப்பனேயெட்டொன்ருய்வடித்துவாங்கி
வார்த்திடுவாயெண்ணெய்படிதானிரண்டு
வாகானசர்க்கரையில்பலந்தாஞென்று
ஏற்றியேவடித்துவிடுமெழுகதாக
இயலுடனேமுழுகிவரத்தீரும்நோய்கேள் 19

கேளப்பாபித்தமென்றதெல்லாம்போகும்
கிறுகிறுப்புதலேசுழற்றல்வாந்திதீரும்
நாளப்பாரத்தமெரித்தலோடு
நலமானஎய்ப்பிளேப்புபித்தரோகஞ்
சூளப்பாமஞ்சளேப்போல்நீர்சுருக்குஞ்
சுற்றலுடனுஷ்ணங்கள்சூடலெல்லாம்
வேளப்பாமேலெரிவுகைகால்காந்தல்
வெளுத்தசடங்கறுப்பாக்கும்விதத்தைப்பாரே 20

சங்கம்வேர்த்தயிலம்.

விதமானசங்கம்வேர்த்தயிலம்கேளு
வெட்டிவந்தகாற்றுலரஇடித்துப்போட்டு
பதமானதூணிசலமெட்டொன்ருக்கி
பகருமெண்ணெயிரண்டுபடிபண்பாய்விட்டு
அதமானமிளகுபலமரைத்துப்போட்டு
அப்பனேமெழுகுபதமானவாறே

Digitized By Roja Muthiah Research Library

சுதமாகவடித்ததனைமுழுகும்போது
சொல்வதென்னகுட்டமொடுசொரிசிரங்கே 21

சிரங்குடனேகிராந்தியொடுசூலைரோகஞ்
செங்கருப்பான்வண்டுகடிசிலவிஷங்கள்
குருபோலவழங்குகின்றசயங்களோடு
குத்திருமல்வாதசயங்கூடியோடும்
வரங்கொடுக்குஞ்சங்கரர்சொல்வார்த்தைகேட்டு
மகமாயிசொலக்கேட்டுவழுத்தினேன்யா
னரங்கமுடனின்னமொருதயிலங்கேளு
அமுக்குராவேர்பலந்தான்பத்துவாங்கே 22

(அமுக்குராவேர்தயிலம்.)

வாங்கியேயிடித்ததனைப்பதக்குநீரில்
வடித்தெண்ணெய்பலமொன்றுமதனிற்சேர்த்து
ஓங்கியதோரெலுமிச்சம்பழச்சார்நாழி
யொக்கவிட்டுமெழுகுபதமுருட்டிப்பார்த்து
தூங்கவேவடித்ததனைவைத்துக்கொண்டு
சுகமாகமுழுகிவரச்சுகத்தைக்கேளு
பாங்கியேமீனிசங்கள்தவிர்ந்துபோகும்
பாரிலுள்ளமண்டையிடிபறந்துபோமே 23

(இஞ்சித்தயிலம்.)

பறப்பதற்குயின்னமொருதயிலங்கேளு
பச்சையிஞ்சிகால்துலாம்பரிந்திடித்து
சிறப்புடனேபிழிந்துவடிகொண்டு நன்றாய்த்
தெளிவானநல்லெண்ணெய்படிதான்விட்டு
உறப்புடனேஆவின்பாற்படிதான்சேர்த்து
வுறுதியாய்மெழுகுபதமாகவாங்கி
நிறப்புடனேமுழுகிவரப்பருவமாகி
நிசமாகத்தீருநோய்நிகழ்த்தினேனே 24

Digitized By Roja Muthiah Research Library

நிகழ்த்துகிறேன்மண்டையிடி சூலேவாதம்
நிலைகொண்டபீனிசங்களிரைப்பிளைப்பு
புகழ்த்துகிறேன்சூலையொடுவாதவாய்வு
பொல்லாதகால்கடுப்புமேல்நோயெல்லாம்
அகலுமேகுட்டமென்பதற்றுப்போகும்
அசதியிருமலுமுடனேநெஞ்சின்கத்ரி
செகமதனில்நாடாமலோடிப்போகுஞ்
செம்முள்ளியெண்ணெய்தனைச்செப்புறேனே 25

(செம்முள்ளித்தயிலம்.)

செப்புகிறேன்செம்முள்ளிபலம்நூறப்பா
சிறப்பாக () மூலத்தோடிடித்துப்போட்டு
ஒப்புகிறேன் தூணிநீரதிலேவிட்டு
வுருக்கவேயிடையொன்றுயுகந்துகாய்ச்சி
அப்புகிறேனதைவடித்துயெண்ணெய்நாழி
யதில்விட்டுமெழுகுபதமாகவாங்கி
நப்புகிறேன்முழுகிவருங்காலந்தன்னில்
நன்றாகத்தீருநோய்நவிலக்கேளே 26

() மூலத்தோடு-செம்முள்ளிவேருடன்.

நவிலக்கேள்சயமீளையிளைப்புரோகம்
நாடாதுமந்தாரகாசத்தோடுங்
கவிலக்கேள்கசநோவுகுன்மநோயுங்
கண்ணீரைப்பாச்சலுடன்விக்கல்தானும்
புவியில்வரும்புண்புரைகளெல்லாந்தீரும்
பொருந்துமரையாப்புக்கிரந்தியண்டவாதம்
நிவியக்கேள்வீக்கமொடுவிஷபாகந்தான்
நீங்குமடாயித்தயிலமுருக்கும்போதே 27

(சாரணைத்தயிலம்.)

உருக்கவேயின்னமொருதயிலங்கேளு
வுறப்பான * சாரணையின்பலந்தான்பத்து

Digitized By Roja Muthiah Research Library

இருக்கவேயிடித்ததனைப்பதக்குநீர்விட்
டெட்டொன்றாய்க்காய்ச்சியபினெண்ணெய்நாழி
மருக்கவேகொதித்ததனைவடித்துவாங்கி
மகத்தானமெழுகுபதமானவாறே
குருக்கவேவடித்ததனைமுழுகும்போது
குடிபோகும்வாதமொடுவாய்வின்கூறே 28

* சாரணை-சாரணத்தியெனவுமருவும்.

(இருவேலிதயிலம்.)

கூறுக * யிருவேலிபலந்தானாறு
கொத்தோடேதரித்திடித்துத்தூணிநீரில்
பேறுகயிட்டெரித்துயெட்டொன்றாக்கிப்
பிறகுயெண்ணெயதில்நாழிநீதான்சேர்த்து
வீறுகக்கொதித்துவற்றிமெழுகதானால்
மெய்யிலேபூசியதைமுழுகும்போது
தேறுதசடலங்கள்தேறிப்போகும்
ஜெனித்தகிறுகிறுப்புப்போந்தெளிவாயாயே 29

* இருவேலி-வெட்டிவேர்.

(அகிற்கட்டைதயிலம்.)

ஆய்ந்தவடற்கட்டைகளின்பலந்தான்கேளு
ஐம்பதுதான்வாங்கியதைத்தூளாய்ப்பண்ணி
வாய்ந்தஜலந்தூணிவிட்டெட்டொன்றாக்கி
வளமானநல்லெண்ணெயதிலேநாழி
பாய்ந்திட்டுமெழுகுபதமானபோதிற்
பக்குவமாய்வடித்துநீமூழ்குங்காலே
வேய்ந்த * நீர்தோஷமெல்லாந்தீரும்பாரு
மேகங்களகலுமின்னம் விளம்பக்கேளே 30

* நீர்தோஷம் சீரத்திற்கொண்டஜலதோஷம்.

Digitized By Roja Muthiah Research Library

(அறுகம்வேர் தயிலம்.)

விளம்பக்கேளறுகம்வேர்பலந்தானூறு
மெய்யுள்ளபச்சையெல்லாந்தள்ளிப்போட்டு
குளம்போலாமுறலில்வைத்திடித்துக்கொண்டு
* கோதில்ஜலமொன்றுபடியதிலேவார்த்து
குழம்பாகக்கரைத்ததனையெட்டொன்றாக்கிக்
குணமாகவடித்தெண்ணெய்நாழிவிட்டு
பழம்போலேமெழுகுபதமானவாறில்
பதனமாய்வடித்ததனைமுழுகுவாயே 31

* தண்ணீர்-நல்லநீர்.

முழுகியேவரும்போதுகுணத்தைக்கேளு
* மூலத்திற்சூடுடனேகபாலச்சூடு
தமுழுகியேபித்தமெல்லாந்தவறுண்டேபோம்
தப்பாதுகுன்மங்களெட்டுமோடும
அழுகியேவருங்கிரந்திசூலைநீர்கள்
ஆனதொருவயிற்றுவலிநெஞ்சிலேனவு
கொழுகியதோர்நீர்க்கடுப்புமேல்வரட்சை
கோலித்தவக்கினியுங்குளிர்ந்துபோமே 32

* மூலம்-ஆசனக்கடுப்பு.

(கொடுப்பைத்தயிலம்)

குளிரவேவகையொன்றுசொல்லக்கேளு
* கொடுப்பைநீர்படிநாழியெண்ணெய்நாழி
தளர்வானகோஷ்டத்திற்பலந்தானொன்று
தன்னுக்குட்பசுவின்பால்விட்டேயாட்டி
யெளிதாகக்கரைத்துவிடுமெழுகுபோலே
யினிதாகவடித்தபின்புயியல்புகேளு
நளினமாய்முழுகிவாமண்டலத்தில்
நலமாகத்தீருநோய்நவிலக்கேளே 33

* கொடுப்பைபொன்னங்காணி.

Digitized By Roja Muthiah Research Library

கேளப்பாபித்தமெல்லாங்கெடிகெட்டோடுங்
கிறுகிறுப்புமண்டையிடிசெயநீர்த்தாகம்
மாளப்பாவுஷ்ணங்களுள்ச்சுரங்கள்
வளருமென்றமேலெரிவுகைகால்காந்தல்
தேள்போன்றகண்ணெரிவுசிரசிற்சூடு
தேகவலியெரிகுன்மந்தீர்ந்துபின்னும்
வாள்போன்றகண்ணுக்குத்தெளிவுண்டாகு
வகத்தானதயிலமிதுவணங்கிச்செய்யே 34

(கையாந்தகரைத்தயிலம்.)

செய்யவேயின்னமொருதயிலங்கேளு
செகத்திலுள்ள * கையான்சார்படிதானென்று
வெய்யவேகற்குழஞ்சாற்படிதானென்று
விளம்புகிறேனெல்லிக்காய்சார்படிதான்
உய்யவேபடியொன்றுமூன்றுங்கேளு
வுருக்கவேயெள்ளெண்ணெய்படிதானென்று
மெய்யானசாதிக்காய்பலந்தானென்று
* வியனுகவேயிடித்து அரைத்துப்போடே 35

* கையாந்தகரை கரிசிலாங்கண்ணி.

* வியனுக-சமமாக.

போட்டதனையெழுகுபதந்தன்னில்வாங்கிப்
புகழாகவேவடித்துமுழுகும்போது
தாஷ்டிகமாந்தலைநோவுகண்ணோவோடு
தளர்வானசெவிநோவுசார்ந்தபித்தம்
ஒட்டிவிடுமுஷ்ணங்கள்பீனிசங்கள்
ஒழிந்துவிடுமென்றுமுனியுரைத்தவாறும்
நாட்டிலுள்ளதின்னமொருதயிலஞ்சொல்வே
னலமான * சவரிபலம்நூறுவாங்கே 36

* சவரி-குறட்டை.

Digitized By Roja Muthiah Research Library

(சவரித்தயிலம்.)

பலம்நூறுதானிடித்துத்தூணிநீரில்
பக்குவமாய்ப்போட்டுவற்றியெட்டொன்றாக்கிச்
ஜலமதனைவடிகொண்டுயெண்ணெய்நாழி
சாந்தமுடன்விட்டிரண்டுஞ் சேர்த்துக்கொண்டு
நலமானகருஞ்சீரகம்பலந்தானென்று
நாட்டியேயரைத்ததனுட்கரைத்துக்காய்ச்சிப்
பெலமானமெழுகுபதமானவாறே
பித்தர்களேவடித்துரைந்துமுழுகுவாயே 37

வாயானவாதமெங்கேகுட்டமெங்கே
வாதத்திலெழுந்தகரைப்பானெங்கே
காயானகாய்ப்பெங்கேகழலையெங்கே
கண்டத்தில்வீக்கமெங்கேவாதமெங்கே
நோயானநோயெல்லாமகன்றுபோகும்
* நுணுக்கமாய்த்தயிலமொன்றுநவிலக்கேளு
சேயானசென்னகரைப்பட்டைதானுந்
தீவிரமாய்ப்பலநூறுதாக்கிடாயே 38

* நுணுக்கம் சொல்பம்.

(சென்னகரைபட்டைதயிலம்)

தாக்கியேயிடித்ததனைப்பதக்குநீரில்
சாதகமாய்ப்போட்டுலர்த்தியதையெட்டொன்றாய்
ஆக்கியேயெள்ளெண்ணெய்படிதான்விட்டு
அதிற்பாதிவேப்பெண்ணெய்கூடச்சேரு
நோக்கியேவசம்புபலமரைத்துப்போடு
நுணுக்கமாய்மெழுகுபதமானபோதில்
தூக்கியேவடித்ததனைமுழுகும்போது
தொலையாதவாதமெல்லாந்துலைந்துபோகும் 39

* சென்னகரை-செந்நாவற்பட்டை.

Page numbering incorrect

Digitized By Roja Muthiah Research Library

(இலுப்பைப்பட்டைதயிலம்.)

போகவேயின்னமொருதயிலங்கேளு
புகழானவிலுப்பைப்பட்டைபலமோநூறு
ஆகவேயிடித்ததனைத்தூணிநீரில்
அன்புடனேபோட்டுடனேயெட்டொன்றாக்கி
வேகவேயெண்ணெய்படிபத்துவிட்டு
வேப்பெண்ணெயதிற்பாதிகூடச்சேரு
() நாகவல்லிச்சாறுடனேபடிதான்சேரு
நன்றாகமெழுகுபதமானவாறே 40

() நாகவல்லி-வெற்றிலை.

பதமாகமுழுகிவரத்திரும்நோய்கள்
பன்னியகபாலச்சூடும்பறந்துபோகும்
இதமாகயின்னமொருதயிலங்கேளு
யிடித்திடுவாயிலுப்பைப்பட்டைபலந்தானூறு
இதமாகத்தூணிநீரதனில்விட்டு
யெட்டொன்றாய்க்காய்ந்தபின்புவடித்துக்கொண்டு
சுதமானயெள்ளெண்ணெய்படிதான்விட்டு
சுந்தரமாயஞ்சத்தூள்போட்டுக்கிண்டே 41

கிண்டியேவடித்திடுவாய்மெழுகதானால்
கேடிலங்கியோடிவிடும்வாதமெல்லாம்
பண்டிதர்க்குயிந்த்முறைபாடமுண்டோ
பார்ப்பதற்குவெகுசுருக்கம்பரிந்துபாரு
கண்டிதமாய்ச்சொல்லிவிட்டேன்சுருக்குமெத்த
கதிகெட்டநோயெல்லாந்தீரவேநெய்
உண்டுகொண்டுயிருப்பதற்குச்சொர்னமுண்டே
யுறுதியிந்தநூல்முறையையுன்னிப்பாரே 42

பொன்னுங்கண்ணிதயிலம்.

உண்ணியேயின்னமொருசெய்திகேளு
உள்ளுக்குத்தயிலமொடுகிலுத்தஞ்சொல்வேன்



Digitized By Roja Muthiah Research Library

கன்னியாம்பொன்னுங்காணிவேர்பலந்தானென்று
கனமானவெட்டிவேர்வெலுமிச்சம்வேர்
புன்னியே () ஓரிதழ்வேர்சிறுகீரைவேர்
புகழாகவகைக்குவொருபலந்தான்சோத்துப்
பன்னியேபால்வார்த்துஅரைத்துநெய்யிற்
படிரண்டுக்குள்ளிட்டுக்காச்சுவாயே 43

() ஓரிதழ்வேர்-தாமரை.

காச்சியேயுட்கொள்ளக்கரண்டிவீதம்
கனரோகப்பதினெட்டுங்காணுதோடும்
மாச்சிதேவுட்சுரங்கள்கண்டுபோகும்
மணுகாவுட்டிணங்கள்தாகம்மேகம்
போச்சுதேவரட்சையொடுவுஷ்ணரோகம்
புண்ணுனஅச்சரங்கள்போகுஞ்சொன்னேன்
எச்சுதேயென்னுதேசாதிக்காயு
மியலானவதிமதுரமாசக்காயே 44

சதாவேரிக்கிருதம்.

காயொன்றுவகைகளிலேபலமொன்ருகக்
கரைத்திடுவாய்காச்சமுன்னேநெய்க்குள்ளாக
தாயென்றுயின்னமொருகிருத்தஞ்சொல்வேன்
() சதாவேரிக்கிழங்கினிடசார்படிதான்
வாயென்ற * திரிகடுகு " திரிபலாதி
வகைவீதங்களஞ்சியொன்றுநெய்யோநாழி
யேயென்றுயெரியிலிட்டுமெழுகதாளுல்
யிறக்கியேவைத்திடுவாயியல்புதானே 45

() சதாவேரி நீர்விட்டான்-அல்லது தண்ணீர்மிட்டான்.

* திரிகடுகு-சுக்கு திப்பிலி-முளகு.

" திரிபலாதி-தான்றி-நெல்லி-கடுக்காய்.

Digitized By Roja Muthiah Research Library

இயலாகக்குடித்திடுவாய்கரண்டிவீதம்
எடுத்ததொருகரப்பனெல்லாமிரங்கிப்போகும்
முயல்வான நீர்தோஷமுழுதும்போகும்
முழங்குகின்றவாயுவுடனிரைச்சல்தீரும்
செயலானபித்தமொடுசிலேற்பனங்கள்
சளியிருமல்கிறுகிறுப்புசெரியாமாந்தம்
மயலானகிறுகிறுப்புமற்றுப்போகும்
மடவார்களின்னமொருகிருதங்கேளே. 45

(திரிகடுகு-திரிபலாதி-யெண்ணெய்.)

கிருதமாந்திரிகடுகுதிரிபலாதி
கேளப்பாவகைக்குவொருபலந்தான்வாங்கி
நருதமாஞ்சலம்பத்துப்படியினுள்ளே
நன்றாகஇடித்துவற்றியெட்டொன்றாக்கி
விருதமாய்ப்போகாமல்மெழுகதாக
வியனாகவடித்ததனைவைத்துக்கொண்டு
சிறுகவேகரண்டிநிறைகொள்ளும்போது
தீருகின்றவியாதிதனைசெப்பக்கேளே. 46

செப்புகின்றசீரகமும்ஓமங்கூட்டிச்
சீராகச்சூரணித்துவைத்துக்கொண்டு
இப்புவியில் * வெருகடிதானெய்யிற்கொள்ள
ஈரெட்டுக்கரப்பனோடுசிலந்திகுட்டம்
நப்புகிறேன்கிராணியொடுஅசீரணங்கள்
நாடோறுநாடாதுபுவியுளோர்க்கு
மெய்ப்படவேயெந்தனதுதாய்சொல்லாலே
இன்னமொருகிருதவகையியம்பக்கேளே. 47

* வெருகடி பூனையடி.

தூதுவளைகிருதம்.

இயம்பக்கேள்தூதுவளைபலந்தான்பத்து
இயல்கண்டங்கத்திரியும்பலந்தான்பத்து

தயவானதுளசியதுபலந்தான்பத்து
சாதகமாய்த் * தோடையிலைபலந்தான்பத்து
நயம்பெறவேவிஷ்ணுகிராந்திபலந்தான்பத்து
நன்றாகப் 0 பிரமியாதுபலந்தான்பத்து
செயமாகயிதையிடித்துத்தூணிநீரிற்
சேரவேகாய்ச்சியதையிறுத்துவாங்கே 48

* தோடையிலை - ஆடாதோடை.

0 பிரமியாது.பிரமமூலி.

இருத்திடவே " யெண்ணெயொடு " நெய்யுங்கேளு
யிதமானதிப்பிலிசித்திரத்தைரண்டும்
வருத்திடவேவகைக்குஅரைபலமதாக
வடிமெழுகுபதமரைத்துச்சலத்திற்கிண்டி
முறித்திடவேபோகாமல்வடித்துக்கொண்டு
முக்கியமாங்கரண்டிநிறையெடுத்துக்கொள்ளு
உருத்திடவேகொண்டாக்காற்றீராநோயும்
உற்றதொருயிருமலெல்லாமோடிப்போகும். 49

" எண்ணெய்-நல்லெண்ணெய்.

" நெய்-பசுவினெய்.

ஓடிப்போந்தேன்கூட்டிக்கொண்டாயானால்
உறுசயங்களிளைப்பீளைதுர்ப்புகக்கல்
ஓடிப்போம்வாய்நோவாடுகெட்டெல்லாமே
ஒவ்வாமலோடிப்போம்நளினமாகும்
தேடிப்போந்திரிகடுநெற்பொரியுங்கூட்டித்
தேனிலேகொண்டுவிடுகிருதஞ்சேர்த்து
தேடிப்போங்கொண்டிடவேசொன்னநோய்கள்
க்ஷேமமாமென்றருள்ச்செய்குவீரே. 50

Digitized By Roja Muthiah Research Library

(ஜன்னிக்கு வசம்புத்தயிலம்.)

செய்தபடிசன்னிக்குத்தயிலங்கேளு
செப்புகிறேன்வசம்புடனே [] வெள்ளுள்ளித்தான்
உய்தமுள்ள " நிலவேரு 0 முசுறுமுட்டை
வுற்பனமாந் * தண்டுடனேகோழிமுட்டை
நெய்நாழிவேப்பெண்ணெய்கூடக்கூட்டி
நிறையாகவகைக்குவொருபலமாய்ச்சேரு
செய்கின்றஆமணக்கினெண்ணெய்நாழி
சிறப்பாகவிட்டதிலேசேர்த்துக்கொண்டு. 51

[] வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு.

" நிலவேர் - நாக்குப்பூச்சி.

0 முசுறு - எறும்பு.

* தண்டு - மூங்கில்.

கொண்டுவிடயெண்ணெய்க்குக்கிஷாயங்கேளு
கூறுகச்சுக்கிடித்துக்கிளிபோற்கட்டிக்
கிண்டிவிடுஞ்சுடவைத்துப்பின்புமைந்தா
கிரமமாய்க்குடித்திடவேசன்னிவாதஞ்
சிண்டுசெய்யும்வலியஞ்சுஞ்சிதறிப்போகுந்
தீராதபிணிகளுக்குவுள்ளேகொள்ள
இன்றுவிடநாளைக்குத்தீருமென்றே
யெளிதாகவித்தயிலமியம்பினேமே. 52

(எருக்கிலைக்குழம்பு.)

இயம்பிடவேவகையொன்றுசொல்லக்கேளு
யெருக்கிலைபாலுழக்குகள்ளிப்பாலுழக்கு
சுயமானநவாச்சாரங் * கழஞ்சுபத்து
சுபமாகவிட்டரைத்துமெழுகதாக்கி
நயம்பெறவேஆமணக்கினெண்ணெய்சேர்த்து
நலமான 0 செம்பதிலேவைத்துக்கொண்டு

Digitized By Roja Muthiah Research Library

செயமானபெருவயிறுமகோதரங்கள்
திறமான நீராம்பல்பாகமென்றே. 53

* கழஞ்சு - ஒன்றேகால்விராகனிடை.
அல்லது-40-குண்டுமெணியிடை.
0 செம்பு-செம்புபரணை.

பாகமாய்மிகக்கிளறியானபின்பு
பகருகின்ற சுண்டைக்காய்வீதங்கொள்ள
வேகமாந்தின்றவுடன்பெந்தந்தானும்
விட்டுவிடவேணுமென்றால்வெந்நீர்கொள்ளு
நாகமாம்விஷம்போன்றவிஷநீரெல்லாம்
நாடாதுபேதித்துவாங்கிப்போகும
ஏகமாமருந்துநீகொண்டாயானால்
யேழுநாட்பாற்கொள்ளயிதமுந்தானே. 54

குப்பமேனிச்சூரணம்.

தானென்றமேனிச்சூரணமேசெய்து
தான்கரியசீரகமுஞ்சூரணித்து
நானென்றநாற்பதுநாள்கொள்வீராகில்
நாடாதுவாய்வோடுதத்தமெலாந்
தீனென்ற * தீபனங்கள் நன்றாய்வாங்கும்
க்ஷணத்திலெமந்தமெல்லாஞ்சிதறுண்டேபோம்
போனென்ற 0 சிலேவிஷங்களெல்லாந்தீரும்
புதுமைசேரக்கினியின்பொடியிதாமே. 55

* தீபனம் - பசியெடுத்தல்.
0 சிலேவிஷம்-ஆராமல்சிலே நீரொழுகும்புண்கள்.

(சீரகப்பொடிகிருதம்.)

பொடியானபொடியொன்றுசொல்லக்கேளு
புகழானசீரகமும்பலந்தானென்று
செடியானவொரு * சன்னப்பொடிபலந்தான்
சிறந்தசர்க்கரையிவையோடொன்றாய்ச்சேர்த்து

Digitized By Roja Muthiah Research Library

வடிவாகவேவடித்துவைத்துக்கொண்டு
வளமான * நறுநெய்யிற்குழைத்துக்கொள்ள
துடியானவூஷ்ணத்தோடுள்ளிரோய்கள்
சுருக்கான நீர்கடுப்புபிரமேகங்கள் 56

* சன்னப்பொடி - சூரணம்.
* நறுநெய் - பசுநெய்.

மேகமுடனுள்க்காய்ச்சலெரிவுகாந்தல்
* வியனுகவெரித்தகுன்மமெல்லாந்திரும்
போகமுறுமெலும்புருக்கிப்போதுத்துப்போம்
பொருக்காத நீர்த்தாகம்புண்ணுநெஞ்சில்
வேகமுற்ம்வாய்நாற்றமேல்நாற்றங்கள்
விட்டோடிவிடுவதற்குவிருந்துபோடு
கூகைநீகருஞ்சீரகஞ்சாதிக்காயுங்
கூட்டியேஅவின்குருசானியோடு. 57

* வியனுக - வெப்பமாக.

(குருசானிப்பொடி.)

குருசானிவகையொன்றுபலமொன்றுகக்
கூட்டியேசரிநிறையாய்வாங்கியேதான்
நிருசானியாகவேவறுத்துக்கொண்டு
நேராக * வேம்பின்சூரணமுஞ்சேர்த்து
உருசானிவானைப்புஅவியவிட்டு
உருகவேபிணிநாசந்தன்னிற்கொள்ள
முருசாணியானதொருகடுப்புளைச்சல்
மூலத்திற்கிராணியொடுபுழுங்கும்வாய்வு 58

* வேம்பு - கருவேம்பு.

(கொடுவேலிச்சூரணம்.)

முழங்கவேவகையொன்றுசொல்லக்கேளு
மூதண்டைக் * கொடுவேலிசூரணித்து

Digitized By Roja Muthiah Research Library

விளங்கவேபடி யொன்று ! சீனப்பாவும்
விதமாகப்படியொன்றுகூடக்கூட்டி
களங்கக்கார்கோலரிசிபடியுமொன்று
கருஞ்சீரகத்துடனற்சீ ரகமுங்கூட்டி
புளங்கவேவகையொன்றுபலமொன்முகப்
புளிதமாய்ச்சூரணித்துப்புகழ்ந்துவையே. 59

* கொடுவேலி-சித்தரமூலம்.

0 பாவு - போடு,

வைத்திட்டசூரணந்தான்றேனிற்கொள்ள
வருஞ்சூலைக்கிரந்தியொடுவாதவாய்வும்
வெற்றிட்டவண்டுகடி * வெளுப்புவெட்டை
விஷகடியுமேல்கரப்பன்விரைந்துபோகும்
பற்றிட்டமேகவகைபறந்துபோகும்
பான்மையுடனுடம்பெல்லாம்பாருபாரு
கைத்திட்டமாகவேசொல்லிவைத்தேன்
கனமானமிளகுநீர்கஷாயங்கொள்ளே. 60

* வெளுப்பு-பாண் அல்லதுசோகை.

(கெர்ப்பமில்லாதவர்களுக்குக்-கெர்ப்பமுண்டாதல்.)

கொள்ளவேமண்டலத்தில்தீமைநோய்கள்
குணமாகுமின்னமொருவகையைக்கேளு
பிள்ளையில்லாதவளுக்குமருந்துசொல்வேன்
பேயக்கொம்மட்டிவித்துநேர்வாளந்தான்
உள்ளபடிசமனுய்க்குளித்தயிலம்வாங்கி
யுறுமஞ்சடபொடியதனிற்சேர்த்துக்கொண்டு
கள்ளமின்றிமத்தித்துக்கொண்டுட்கொண்டால்
கன்னியவளம்மாதங்கெர்ப்பமாவாள். 61

கெர்ப்பமதுமாவதற்குமருந்தும்வேறே
இலேசிக்கவேண்டாங்காணேயுந்தீரும்

Digitized By Roja Muthiah Research Library

செப்பமுடன்மருந்துகொண்டால்வெந்நீர்கொள்ளு
தெளிவாகப்பேதிக்குங்கஞ்சிகொள்ளும்
உற்பமாய்மூன்றுநாட்குளித்தநாள்தொட்
டுறுதியாய்க்கொண்டுவிடுவொருபோதுண்ணு
அற்பமென்றுநினையாதேயுறுதிப்பாரு
மதைவிட்டுயின்னமொருமடைவுகேளே. 62

(கிராணிப்பேதிக்குலேகியம்.)

அடைவானகொம்பரக்குக்குந்தரிக்க
மானகுருசானியபின்சாதிக்காயுந்
திடமாகச்சூரணித்துநல்லெண்ணெய்க்குள்த்
திரட்டியேகொண்டுவிடுசிறுபுன்னைக்காய்
குடலோடேபற்றுகின்றவயிற்றுளைவுங்
குத்துகின்றகுறுக்குவலிமூலச்சூடு
கடல்போலேவந்ததொருகடுப்புத்தீரும்
கண்டிமுள்ள புண்ணாறுங்கண்டவாறே. 63

(காதுக்கூஎண்ணெய்)

கண்டபடிசெய்யிலொன்றுசொல்லக்கேளும்
காதுக்குயெண்ணெயொன்றுகட்டுதற்கு
விண்டபடி * முசுறுமுட்டை * பூநாகந்தான்
வெற்றியுள்ளநண்டிறச்சிவெள்ளையுள்ளி
கொண்டபடிகோழிமுட்டைவசம்பு () குக்கில்
குணமாகவகைக்குவகைகழஞ்சுகூட்டிப்
பண்டருளும்வேப்பெண்ணெய்தன்னிற்சேர்த்துப்
பதமாகக்காய்ச்சியதைக்காதிற்சேர்த்துப் 64

* பூநாகம்-நாக்குப்பூச்சி.

0 குக்கில்-குங்கிலியம்-

* முசுறுமுட்டை-எறும்புமுட்டை.



Digitized By Roja Muthiah Research Library

பாய்ச்சியேயடைத்திடுவாய்பத்துநாளில்
பளிச்சென்றுசெவிகேழ்க்குஞ்சீழ்பாச்சர்போ
மாச்சுதேகுத்துளைச்சற்பூச்சிச்சாகு
மடைப்புவிடுங்காதிரைச்சலதுவுந்தீரும்
வாச்சுதேயின்னமொருவரிசைகேளு
வாயிலுள்ளவியாதியெல்லாமகன்றுபோக
பாச்சையாபாகத்தில்முன்தைலமஞ்சிப்
பச்சையாய்த்தின்றொருதுக்கப்பற்குத்துப்போம். 65

(பல்குத்துக்கு.)

குத்துவிடுமுட்பிரண்டைவேர்கியாழங்
கொப்பிளிக்கப்பல்லரணைத்தந்தகூலை
அத்துப்போமசைந்தபல்லுமுறத்துநிற்கு
மழுக்கெல்லாந்தீர்ந்துவிடுமின்னங்கேளு
செத்துப்போம்நாக்கிலவருஞ்சிங்கிரோகந்
தீரவொருமருந்துசொல்வேன்சிவவேம்பின்வேர்
முத்துப்போல்பல்விளங்குமபத்துநாளில்
முறையானமேகமெல்லாமுழுதுபோமே. 66

முழுதுமேபோகவொருமருந்துசொல்வேன்
மூதண்டவெளவேருங் * குமிழ்தான்வன்னி
பழுதில்லாமருந்துடனேகுண்டலமாம் () பாலை
பழுத்தயெருக்கிலையுடனேபலாசுகாரை
தொழுதுநீபட்டையதுசமனுய்த்தூக்கித்
தூணிநீர்தனிற்போட்டுவெட்டொன்றுக்கிப்
பழுதுவராமற்காச்சிவடித்துக்கொண்டு
பாங்கான சம்பிரச்சாறுநாழி 67

* குமிழ்- நிலக்குமிழ்.

0 பாலை-வெட்பாலை.

* வன்னி-கொடிவேலி.

Digitized By Roja Muthiah Research Library

நாழியுடனெள்ளெண்ணெய் நாழிவிட்டு
நலமான துருசுவெள்ளைகுந்திரிக்கம்
வேழியுடன்வகை நாழிகழஞ்சுவீதம்
விதமாகப்பொடித்திட்டுவடித்துக்கொண்டு
கோழியிடரத்தம்விட்டுக்கொப்பளிப்பாய்
குவடுகளிற்கட்டுமுதற்குலைந்தபல்லும்
வாருயெனவீக்கமுதற்பிணிகளெல்லாம்
வாங்கிப்போம்வளமானவரிசைபாரே. 68

பார்ப்பதற்குஇன்னமொருவரிசைகேளு
0 பாகலிலைச்சாறுடன்*கொம்மட்டிக்காய்ச்சாறு
ஏற்பதற்குவேம்பினிடஇலையின்சாறு
மெருக்கிலைச்சாற்விளிப்பாலைச்சாற்வகைக்குநாழி
சேர்ப்பதற்குவேம்பெண்ணெயாமணக்கினெண்ணெய்
திரளவேமெழுகுபதஞ்சேரவாங்கி
தாக்குடனேகாசிடையாய்க்கொண்டபேர்க்குச்
சலக்கட்டும்வலக்கட்டுங்கிருமியோடே. 69

0 பாகலிலை-பலாவிலை.

* கொம்மட்டி-புளிமாதுரை.

கிருமியென்றகிருமியெல்லாங்கண்டுபோகுங்
கெர்ப்பத்தின்கிருமியெல்லாங்கெதிகெட்டோடும்
வருமியென்றவாய்வெல்லாமண்ணைப்போகும்
வாதமொடுமலக்கட்டுத்திரண்டவாய்வும்
ஒருமித்தநோய்களல்லாமோடிப்போகும்
உலகத்தில்வெகுசுருக்குவிரைத்துப்பாரும்
கருமியென்றவகையெல்லாஞ்சொல்லிவிட்டேன்
கஷாயத்தின்விதங்களையுங்காட்டுறேனே. 70

## குறுந்தொட்டிவேர்க்கிஷாயம்.

காட்டுறேன்*குறுந்தொட்டிவேர்க்கிஷாயத்தார்
காயேலஞ்சீரகமுங்காலாய்க்கூட்டி

Digitized By Roja Muthiah Research Library

ஓட்டுகின்றஇருநாழி நீரில்விட்டு
உழக்காகக்காய்ச்சியேயிருபோதுண்ண
மூட்டாமல்மூன்றுநாட்கொண்டாயானால்
உட்சுரமும்மூலவாய்வனைத்துமப்போ
மீட்டுவிடும்பித்தமெல்லாம்வாந்திதீரும்
விளம்புகிறேன்னமொருவிதங்கள்பாரே. 71

*குறுந்தொட்டி-சிறுகாஞ்சொறி

வெட்பாலைக்கியாழம்.

விதமென்னவெட்பாலைசீரகமுங்கூட்டி
வீராகவகைக்குக்கால்பலமதாக
இதமுடனேயிருநாழி நீரில்விட்டு
எட்டொன்றாய்க்காய்ச்சியே யிறுத்துக்கொள்ள
பதமென்னவருசுரங்கள் பறந்துபோகும்
படுபாவிபித்தமெல்லாம்பறந்துபோகும்
மதமென்றமாய்வெல்லமகன்றுபோகும்
வளமானஇன்னமொருவரிசைகேளே. 72

வில்வவேரின்கியாழம்.

வரிசையுளவில்வவேர்நெற்பொரியுங்கூட்டி
வகைக்குக்கால்பலமாயிருநாழி நீரில்
உரிசையுடனெட்டொன்றாய்வடித்துக்கொண்டு
உடனருத்தவாதபித்தவீக்கந்தீரும்
பிரியமுடன்னமொருகிஷாயம்சொல்வேன்
பேரானவில்வவேர்அமுக்கிலாம்வேர்
துருசானசுக்குடனேவகைக்குக்காலால்
சூட்டியேயிருநாழி நீரிலிட்டு 73

இட்டவித்துளட்டொன்றாய்வைத்துக்காய்ச்சி
இருந்துநீகொண்டிடவேவிக்கல்வாந்தி
முட்டவருமசதியொடுஊஷலத்தாகம்
முறையானசுரந்தீருமொழிந்தவாறே
சட்டமுடனின்னமொருகிஷாயங்கேளு
தருவானமுத்தமொடுவிஷ்ணுகிராந்தி

இஷ்டமுடன்வகைக்குக்கால்பலமதாக
இருநாழி நீரில்விட்டொன்றுக்கே 74

ஆக்கியேமூன்றுநாளிருபோதுண்ண
அகண்டசயமீளையிளைப்பதிசுமூச்சு
போக்கிவிடுமதிலேஞெடுமினகுகூட்டிப்
போட்டுவிடுகிஷாயத்தைத்தேனிற்கொள்ளு
வாக்கியமாயின்னமொருகிஷாயஞ்சொல்வேன்
வளர்நெல்லிதான்றியுடன்கடுக்காய்மூன்று
தோக்கியேவகைக்குக்காற்பலமதாக
நுண்மையாய்மிளகதிலேகழஞ்சுகூட்டே 75

கூட்டியேயிருநாழி நீரிலிட்டுக்
குலாவவேயெட்டொன்றாய்த்தேனுஞ்சேர்த்து
நாட்டியேதிரிகடுகுமேற்பொடியாய்த்தூவி
நலமாகவேயருந்தசிலேற்பனங்கள்
நீட்டியேபீளையுடனிசுப்புக்கக்கல்
நிறுத்துமேகங்களெல்லாம்நினைவாய்க்காணும்
ஓட்டியேவிடுவதற்குஇன்னமொன்று
உறைக்கிறேனுலகத்தோர்பிழைக்கவென்றே 76

சந்தனக்கியாழம்.

என்றதொருசந்தனமுமிலாமிச்சம்வேர்
வெட்பாலேமுத்தமொடுசுக்குங்கூட்டி
நன்றெனவேவகைக்குக்கால்பலமதாக
நயமுடனேயிருநாழி நீரிலிட்டு
பொன்றெனவேயெட்டொன்றாய்வடித்துக்கொண்டு
புகலுஞ்சர்க்கரையுடனேபத்துநாட்கொள்
நின்றதொருசிரவாய்வுசிரதோஷங்கள்
நிகழ்சுரத்திலுள்ளபித்தம்செட்டுவாதம் 77

() விலாமிச்சம்வேர் குரிவேர்.

Digitized By Roja Muthiah Research Library

### வேப்புக்கியாழம்.

வாதமொடுசுரங்கள் நீர்க்கடுப்புத்தானு
மஞ்சளூறும்பித்தகாமாலைதீரும்
வேதமொடுஇன்னமொருகியாழஞ்சொல்வேன்
வேம்பினதுபட்டையுடன்மிளகுசுக்கு
நாதமொடுவகைக்குக்காற்பலமதாக
நளினமுடனிருநாழி நீரில்விட்டு
போதமுடனெட்டொன்றாய்வடித்துக்கொண்டு
புழுக்கிருமிமந்தமறும்வாய்வெல்லாமே. 78

### இருவேலிக் கியாழம்.

எல்லாந்தான் தீரவொருகியாழஞ்சொல்வேன்
இருவேலி() மதுரமுடனின்சிகூட்டி
சொல்லாமல்வகைக்குக்கால்பலமதாகத்
தூக்கியேயொருநாழி நீரைவிட்டு
வெல்லவேதீயெரித்துஎட்டொன்றாக்கி
விதமாகப்பத்துநாள்கொள்ளும்போது
வல்லதொருவாய்வுபோம்புத்தஞ்சாகும்
வகையுடனேபுவியிலிதைவகுத்திட்டேனே. 79

() மதுரம்-அதிமதுரம்

### மவுத்திரம்-கண்டமாலைக்குக்கியாழம்-

வருக்கக்கேள்கண்டமாலைபவுத்திரங்கள்
வலிமையுள்ளவிப்புருதிவீக்கம்தானும்
தொருக்கக்கேள்துடைவாழைபுண்சூலைதான்
தொந்தரவுசெயும்பிளவைவீக்கத்தோடு
மிகுதிட்டஅரையாப்புமூன்றுமெய்யாய்
வெதனைகள்செய்யாவலுடைந்துபோக
பருக்கக்கேளதற்குரியமருந்தைநீயும்
படியினிலேகூறுவேன்பரிந்துதானே 80

பரிந்துடனே அமுக்கனுங்கிழங்கிறேடும்
பாசமுள்ளபெருங்காயமிரண்டுகொண்டு
தெரிந்திடவேகோருபுட்டைதன்னை வாங்கி
திகழுடதின்வெள்ளம்பல் தன்னைவிட்டு
நெரிந்திடவேசந்தனக்கல்தனிலுரைத்து
நேமமாய்மைபோலேவாரிக்கொண்டு
சொரிந்திடவே அப்புண்மேற்கனமாய்பூசிச்
சொலப்போகுங்கஷாயத்தின்கூட்சங்கேளே 81

கேளப்பாகரசனுங்கண்ணிச்சாற்றிற்
கீர்த்தியுள்ளகற்றாழைமடலேற்சிவி
வேளப்பாவுள்ளிருக்குஞ்சோற்றைத்தானும்
விதமாகவெடுத்தந்தசாற்றிற்சேர்த்து
நாளப்பாயிரவியினிற்காயவைத்து
நன்றாகபத்துபலமானபோது
ஆளப்பா() திரிகடுகு*திரிபலாதி
அதைக்கண்டுவறுத்திடித்துவதனிற்சேரே. 82

() திரிகடுகு-சுக்கு,மிளகு,திப்பிலி

* திரிபலாதி-தான்றி,நெல்லி,கடுக்காய்.

சேர்த்திந்தவகைகளெல்லாமொன்றதாக
தீயினிலேகாயவைத்துமெழுகதாக
பார்த்ததனையிறக்கிக்கொண்டுடனேகேளாய்
பகருஞ்சர்க்கரைபலந்தான்பத்துகொண்டு
கீர்த்தியுடனதிற்கலந்துளட்டொன்றாக்கி
கேளப்பாசாடியினில்வைத்துக்கொண்டு
பூர்த்தியாய்ப்புன்னைக்காயளவதாகப்
புண்ணியனே()மண்டலந்தானென்றுகொள்ளே. 83

() மண்டலம்-40-நாள்

வைத்தியதயிலமுறைகள்.

மண்டலந்தானொன்றுக்கிருபோதாக
மாறுமலதையருந்தமைந்தாகேளாய்
கண்டமாலைகள்பவுத்திரம்வீக்கம்தானும்
கூட்டியதோர் துடைவாழைஅரையாப்போடு
கொண்டபுண்புரைகளெல்லாம்கெதிகெட்டோடும்
குருவாகஅதையெண்ணிச்செயதிட்டாலே
அண்டிடாதெப்போதுமார்ந்துபாரய்
அன்பனேஆயிசொல்லுமதியிதகமே 84

மதிமிகுந்தபுவியிலுள்ளமனிதர்க்கெல்லாம்
வாய்த்தபிணிதீர்வதற்குவளமதாக
நிதிமிகுந்தஅவிழ்தங்கள்தயிலத்தோடு
நிச்சயமாயங்கைநெல்லிகனியைப்போலப்
பதிமிகுந்தபாடற்களுண்மையாகப்
பகுத்திட்டேன்பண்பாகவயித்தியர்க்குந்
துதிமிடிந்ததாகவெண்ணிச்செய்வராகிற் னேன்
றுலைந்தோடும்பிணிகளெல்லாஞ்சுருக்கிச்சொன்

அகஸ்தியமஹாமுனிவர்

அருளிச்செய்த

வயித்தியதயிலமுறைகன்

முற்றிற்று.

உ

பதிணெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய,

சிரோரத்தின நடனகாண்டம்

| | | | |
|---|---|---|---|
| 1500 பாடல் | 1 | 4 | 0 |
| ஷை வயித்தியமூலிகை அகராதி | 1 | 0 | 0 |
| ஷை கிளேஷ் | 1 | 8 | 0 |
| கருவூரார்பலதிரட்டு 300 பாடல் | 0 | 8 | 0 |

டி. சாரதா புத்தகசாலை,

தங்கசாலை போஸ்டு, சென்னை,

Page numbering incorrect

Digitized By Roja Muthiah Research Library

# வைத்திய புஸ்தக விளம்பரம்

| | | | |
|---|---|---|---|
| போகர் சப்தகாண்டம் 7000-ம் பாடல் | 4 | 0 | 0 |
| ஷை கிளேஸ் காகிதம் சுத்தபதிப்பு | 6 | 0 | 0 |
| போகர் 1200 பாடல் | 1 | 8 | 0 |
| போகர் நிகண்டு 500 பாடல் | 0 | 10 | 0 |
| போகர் ஜெனனசாகரம் | 0 | 10 | 0 |
| போகர்சரக்குவைப்பு 800 பாடல் | 0 | 14 | 0 |
| அகஸ்தியர் ஆயுள்வேதம் 1200 பாடல் | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் பரிபாஷைதிரட்டு-500 பாடல் | 0 | 6 | 0 |
| அகஸ்தியர் செந்தூரம் 300 பாடல் | 0 | 6 | 0 |
| அகஸ்தியர் வயித்தியதைல முறைகள் 100 | 0 | 6 | 0 |
| தேரையர் வைத்தியம் 1001 பாடல் | 0 | 12 | 0 |
| தேரையர் வைத்தியம் 500 பாடல் | 0 | 10 | 0 |
| தேரையர் கரிசல் 300 பாடல் | 0 | 8 | 0 |
| பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய மூலிகை அகராதி | 1 | 0 | 0 |
| ஷை கிளேஸ் காலிகோபைண்டு | 1 | 8 | 0 |
| ஷை யார் இயற்றிய சிரோரத்தின நடன காண்டம் 1500 பாடல் | 1 | 4 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம் 500 பாடல் | 0 | 12 | 0 |
| ஷை 200 பாடல் | 0 | 6 | 0 |
| ஷை 100 பாடல் | 0 | 2 | 0 |
| தன்வந்திரி வைத்தியம் 500 பாடல் | 0 | 8 | 0 |
| தன்வந்திரி நிகண்டு 300 பாடல் | 0 | 8 | 0 |
| கருவூரார் பலதிரட்டு 300 பாடல் | 0 | 8 | 0 |

இவைதவிர மற்றெவ்வித தமிழ் புத்தகங்களும் கிடைக்கும். மொத்தமாக வாங்கும் உபாத்தியார்களுக்கும். புஸ்தகவியாபாரிகளுக்கு சரசமான விலைக்குத்தரப்படும் புஸ்தக ஜாபிதாவேண்டுபவர்கள் முழுவிலாசத்தைத் தெரிவித்தால்இனாமாக அனுப்பப்படும்

எமது விலாசம்

## டி. சாரதாபுத்தக சாலை,

நெ, 23 பாளையப்பன் தெருவு. மின்ட் போஸ்டு. சென்னை.

Digitized By Roja Muthiah Research Library